# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **மத்திய மற்றும் மாநில ஆணையங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - I முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# மத்திய மற்றும் மாநில ஆணையங்கள்

- இரண்டு அரசுகளைக் கொண்ட கூட்டாட்சி முறையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கொள்கைகளும் அவற்றின் செயலாக்கமும் ஒத்திருப்பது மிகவும் கடினம். கூட்டாட்சியின் அலகுகளிடையே ஒத்துழைப்பையும் ஒருமைப் -பாட்டினையும் உருவாக்க ஒரு கூட்டாட்சி மன்றத்தை அமைக்க **சரத்து 263** வகை செய்கின்றது.
- இவ்விதி பின்வரும் கடமைகளைக் கொண்ட ஒரு குழுவினை அமைத்தால் பொதுமக்களின் நலன் காக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் கருதினால் அவர் அத்தகைய ஒரு குழுவினை அமைக்கலாம் என்று கூறுகிறது.
- மாநிலங்களிடையே எழுந்துள்ள பிரச்சனைகளை விசாரிப்பது மற்றும் அதன் மீது ஆலோசனை வழங்குவது.
- சில, அல்லது அனைத்து மாநிலங்களுமோ, அல்லது மத்திய அரசும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளும் விரும்பும் விவகாரங்களை விவாதிப்பது மற்றும் ஆய்வு செய்வது.
- சில விவகாரங்களின் மீது குறிப்பாக ஒத்துழைப்பை ஏற்படுத்தும் விவகாரங்களின் மீது பரிந்துரைகளை அளிப்பது.
- இத்தகைய குழுவினால் பணி சம்பந்தப்பட்ட விவகாரங்களை ஆய்வு செய்வதும் அவற்றின் மீது பரிந்துரைகளை அளிப்பதும் மட்டுமே ஆகும்.
- இக்குழுவினால் நடுத்தீர்வு வழங்க இயலாது. பின்வருபவர்களைக் கொண்ட மாநிலங்களிடையேயான குழுவினை குடியரசுத் தலைவர் **1990 ஆம் ஆண்டு** அமைத்தார்.பிரதமரே இதன் தலைவராவார்.
- மாநிலங்களின் முதலமைச்சர்களும் சட்டசபைகளைக் கொண்ட யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்களும் மற்றும் **6 மத்திய கேபினட்** அமைச்சர்களும் இதன் உறுப்பினர்கள்.
- மத்திய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களும் இக்குழுவின் கூட்டங்களுக்கு தேவைப்பட்டால் அழைக்கப்படுவர்.
- இதன் நடைமுறைகள் வெளிப்படை -யானதாக இருக்கும். மேலும் இதன் முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்படும்.
- இதற்கு முன் குடியரசுத் தலைவர் தேசிய உள்நாட்டு அரசாங்க

குழுவினையும் போக்குவரத்து மேம்பாட்டு குழுவினையும் அமைத்தார்.

- ❖ மாநிலங்களிடையேயான குழுவினை மற்ற அமைப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்ட இதனை அரசுகளுக்கிடையேயான குழு என்று அழைக்க வேண்டும் என் **சர்க்காரியா குழு** பரிந்துரை செய்தது.
- ❖ 1997 ஜூலையில் இக்குழுவின் கூட்டத்தில் 10வது நிதிக்குழு கூறிய மாற்று அதிகாரம் வழங்குதல் முறையை நடைமுறைப்படுத்தவும் **சரத்து 356யை** உபயோகிப்பதை கடினமாக்க நடவடிக்கைகள் எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.